ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதிவிசேஷமானது

අංක 2182/44 - 2020 ජූලි මස 03 වැනි සිකුරාදා - 2020.07.03

*2182/44 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு யூலை மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) – பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

***1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்***

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் படி, நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சர், மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின், குண்டசாலை - ஹாரகம நீர் வழங்கல் திட்டத்தின், மீ கனுவ பம்பிக்கும் நிலையத்திலிருந்து அம்பிடிய நீர் விநியோகத் தாங்கி வரை பிரதான குழாய்களை பொருத்துவதற்கும் மற்றும் குழாய் வழிகளை நடாத்துவதற்கும் தேவையான காணித்துண்டுகளின் பயன்பாட்டு உரிமையை பெற்றுக் கொள்ள தேவைப்படுவதனால், இங்கு கீழ்க் காணப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டுகளின் பயன்பாட்டு உரிமையைப் பெற்றுக்கொள்வதற்கான கட்டளையை அனுமதிக்கின்றேன்.*

**மஹிந்த ராஜபக்ஷ,**
நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும்
வீடமைப்பு வசதிகள் அமைச்சர்.

நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சு,
இல. 35, புதிய பாராளுமன்ற வீதி, பெலவத்த,
பத்தரமுல்லை.
2019, ஏப்பிறல் 22.

5/4/ky/2.


1A – G32429 – 28 (2020/07)


இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

## அட்டவணை

மத்திய மாகாணத்தின், கண்டி மாவட்டத்தில், கண்டிப் பட்டினம் (கண்டி கடவத் சதர மற்றும் கங்கவட கோரலே) பிரதேச செயலாளர் பிரிவில், இல. 270, அம்பிடிய உடகம தெற்கு கிராம அலுவலர் பிரிவில், அம்பிடிய கிராமத்திலமைந்த, "மில்லகஹஹேன" எனும் பெயருடைய காணியின் முழு அளவில் 4.81 பர்ச்சஸ் அளவிலான, கீழ்க் காணப்படும் எல்லைகளில் அமைந்த காணித்துண்டுகள் இரண்டு :

காணித்துண்டின் இல. : 01
காணியின் பெயர் : மில்லகஹஹேன
விஸ்தீரணம் : 01 பேர்ச்சஸ்

**காணியின் எல்லைகள் :**

வடக்கு : உரிமையாளர் அற்ற (தெரியாத) காணித் துண்டு;
கிழக்கு : பயன்பாட்டு உரிமையைப் பெற்றுக் கொள்வதற்கு திட்டமிடப்பட்ட காணித் துண்டு இல. 02 (பொதுப் பாதை) ;
தெற்கு : எஸ். கமகே உரிமை கோரும் இக் காணியின் எஞ்சிய பகுதி ;
மேற்கு : தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு உரித்தான காணி.

காணித்துண்டின் இல. : 02
காணியின் பெயர் : மில்லகஹஹேன
விஸ்தீரணம் : 3.81 பேர்ச்சஸ்

**காணியின் எல்லைகள் :**

வடக்கு : வைத்தியர் ஜயரத்ன உரிமை கோரும் காணி;
கிழக்கு : கண்டி - அம்பிடிய பிரதான வீதி (வீதி அபிவிருத்தி அதிகாரசபை) ;
தெற்கு : சிந்தக உரிமை கோரும் காணி;
மேற்கு : எஸ். கமகே உரிமை கோரும் காணி.

**காணிக்கு உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும் :** காணித்துண்டு இல. 01 மற்றும் 02

1. திருமதி எஸ். கமகே,
   இல. 1/349,
   கண்டி வீதி, அம்பிடிய.

07-482